பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று முன்தினம் (15.12.2024) கன்னியாகுமரி மாவட்டத்தில் அமைந்துள்ள திருவள்ளுவர் சிலையிலிருந்து சுவாமி விவேகானந்தர் நினைவு மண்டபம் வரை நடந்து செல்வதற்கான கண்ணாடி இழை தரைத்தள பாலத்தின் இறுதி கட்ட பணியினை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஆய்வின் போது சட்டமன்ற உறுப்பினர் மனோ தங்கராஜ், பொதுப்பணித் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, பொதுப்பணித் துறை பொறியாளர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

திருவள்ளுவர் சிலை முதல் விவேகானந்தர் நினைவு மண்டபம் வரை

நவீன தொழில்நுட்பத்தில் கடல்சார் நடைபாதை பாலப் பணிகள்!

பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு நேரில் ஆய்வு செய்தார்!

கன்னியாகுமரி, டிச.17-

பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள், பொதுப்பணித்துறை அரசு கூடுதல் செயலாளர் மன்கத் ராம் சர்மா, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, முன்னாள் அமைச்சர் மற்றும் பத்மநாபபுரம் சட்ட மன்ற உறுப்பினர் மனோ தங்கராஜ் ஆகியோர் முன்னிலையில் நேற்று முன்தினம் (15.12.2024) கன்னியாகுமரி திருவள்ளுவர் சிலை முதல் விவேகானந்தர் பாறை வரை சுற்றுலா பயணிகள் நடந்து செல்லும் வகையில் அமைக்கப்பட்டு வரும் கண்ணாடி இழை கூண்டு பாலத்தினை நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் கூறியதாவது:-

முக்கடல் சங்கமிக்கும் கன்னியாகுமரியில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் 2000 ஆண்டு நிறுவப்பட்டு தற்போது வெள்ளி விழா காண இருக்கும் அய்யன் திருவள்ளுவர் சிலையும் விவேகானந்தர் பாறையையும் இணைக்கும் கடல்சார் நடைபாதை பாலப்பணிகள் ரூ.37 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

இப்பாலத்தின் நீளம் 77 மீட்டர் மற்றும் அகலம் 10 மீட்டர் கொண்ட Bowstring Arch Bridge (பவ்ஸ்ட்ரிங் ஆர்ச் பாலம்) ஆகும். இது நவீன தொழில் நுட்பத்தில் கடல் அரிப்பு, கடல் காற்றின் வேகம் போன்ற காரணிகளைக் கருத்தில் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

தற்போது விவேகானந்தர் பாறையினை கண்டுகளிக்கும் சுற்றுலா பயணிகள் மீண்டும் படகு மூலம் அய்யன் திருவள்ளுவர் சிலையினை காண செல்வதால் அதிக நேரம் விரயமாகின்றது. இந்நடைபாலம் அமைக்கப்படுவதால் சுற்றுலா பயணிகள் எளிதாக அய்யன் திருவள்ளுவர் சிலைக்கு செல்லலாம். இப்பாலத்தில் 2.5 மீட்டர் அகலமுடைய கண்ணாடி அடித்தளம் கொண்ட நடைபாதை அமைக்கப்படவுள்ளது. நடைபெற்று வரும் பாலப்பணிகளை சென்னை ஐ.ஐ.டி தொழில்நுட்ப வல்லுநர்களின் மேற்பார்வையில் நடைபெற்று வருகிறது.

வண்ண விளக்குகளால் அலங்கரிங்கப்படும்!

மேலும் டிசம்பர் 30 மற்றும் 31 அன்று கன்னியாகுமரியில் அய்யன் திருவள்ளுவர் சிலை வெள்ளி விழா நிகழ்ச்சி சிறப்பாக கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதில் பொதுப்பணித்துறை சார்பாக மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மாவட்ட நீதிமன்றம், மார்ஷல் நேசமணி மணி மண்டபம், பொதுவுடைமை வீரர் ப.ஜீவானந்தம் மணி மண்டபம், சதாவதானி செய்குதம்பி பாவலர் நினைவு மண்டபம், பெருந்தலைவர் காமராஜர் மணி மண்டபம், காந்தி நினைவு மண்டபம் உள்ளிட்டவைகள் வண்ண விளக்குகளால் அலங்கரிங்கப்படும்.

மேடை அமைத்தல் பணிகளும் பொதுப்பணித்துறை சார்பில் ஏற்பாடு செய்யப்படும். தற்போது திருவள்ளுவர் சிலை முதல் விவேகானந்தர் பாறை வரை சுற்றுலா பயணிகள் நடந்து செல்லும் வகையில் அமைக்கப்பட்டு வரும் கண்ணாடி இழை கூண்டு பாலப்பணிகள் 95 சதவீத பணிகள் முடிவுற்றுள்ளது. கடல் அரிப்பு, காற்றின்வேகம் போன்ற இயற்கை காரணிகளை கருத்தில் கொண்டு பணிகள் நடைபெற்று வருகிறது. அய்யன் திருவள்ளுவர் சிலை வெள்ளி விழா நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற தங்கள் அனைவரும் முழு ஒத்துழைப்பு தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

நடைபெற்ற ஆய்வுகளில் மாவட்ட வருவாய் அலுவலர்ஜெ.பாலசுப்பிரமணியம், நெடுஞ்சாலை துறை கண்காணிப்பு ஆய்வாளர் பாஸ்கர், நெடுஞ்சாலைத்துறை கோட்ட செயற்பொறியாளர் சத்தியமூர்த்தி, நெடுஞ்சாலைத்துறை உதவி கோட்ட பொறியாளர்கள் ஜெரால்டு ஆண்டனி (நாகர்கோவில்), திருமதி. விஜயா (தக்கலை), வெனிஸ் (தோவாளை), பிரவீன் குமார் (குழித்துறை), உதவி செயற்பொறியாளர்கள் முருகேசன் (கட்டடம் மற்றும் பராமரிப்பு), திருமதி. ராஜலெட்சுமி (மின்னியல்), பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழக மேலாளர் ஆறுமுகம், கன்னியாகுமரி பேரூராட்சி தலைவர் குமரி ஸ்டீபன், துணை தலைவர் திருமதி.ஜெனஸ் மைக்கேல், இராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றிய துணை தலைவர்கள் சரவணன், தோவாளை ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினர் பூதலிங்க பிள்ளை, நெடுஞ்சாலைத்துறை உதவி பொறியாளர்கள் அரவிந்த் (நாகர்கோவில்), ரெஜ்வின் (தக்கலை), வட்டார மருத்துவக்குழு உறுப்பினர் பாபு, துறை அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆட்சியில் - வீடுகளுக்கு

இந்தியாவிலேயே மிகக்குறைந்த மின் கட்டணம் தமிழ்நாட்டில்தான்!

ஏழை, எளியோர் வாழ்வில் ஒளியேற்றும் முதல்வர்!

சென்னை, டிச. 17-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சியில் வீடுகளுக்கு மின்சாரம் வழங்குவதில் இந்தியாவிலேயே மிகக் குறைந்த கட்டணம் தமிழ்நாட்டில்தான் 2023 மார்ச் திங்கள் கட்டண விகிதங்களின்படி 100 யூனிட் மின்சாரத்திற்கு அனைத்து வரிகள் உட்பட மும்பையில் ரூ.643, இராஜஸ்தானில் ரூ.833, மத்திய பிரதேசத்தில் ரூ.618, உத்திர பிரதேசத்தில் ரூ.693, பீகாரில் ரூ.689, மராட்டியத்தில் ரூ.668 ஆனால், தமிழ்நாட்டில் ரூ.113 மட்டுமே.



வீடுகளுக்கு வழங்கப்படும் மின்சாரக் கட்டணம் இந்திய அளவில் ஒப்பிடும் போது, தமிழ்நாட்டில்தான் மிகமிகக் குறைவாக உள்ளது. மின்சாரக் கட்டணங்கள் மற்றும் வரி குறித்த சராசரி குறித்து 2023 மார்ச் நிலையில் புள்ளிவிவரங்கள் தொகுக்கப்பட்டு அரவிந்த் வாரியர் அவர்களால் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த விவரங்கள் அடிப்படையில் இந்திய மாநிலங்கள் ஒவ்வொன்றிலும் வீடுகளுக்கு வழங்கப்படும் மின்கட்டணங்களை ஒப்பிட்டுப்பார்த்தால் இந்தியாவில் தமிழ்நாட்டில்தான் வீட்டு உபயோக மின்கட்டணம் வேறு எந்த ஒரு மாநிலத்தையும் விட மிகமிகக் குறைவாக உள்ளது என்ற உண்மை வெளிப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில்தான் விவசாயிகளுக்கு முதன்முதலில் இலவச மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சியிலும் 2 இலட்சம் விவசாய பம்புசெட்டுகளுக்கு இலவச மின்சாரம் வழங்கிட ஆணையிடப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

அதேபோல, விசைத்தறி நெசவாளர்களுக்கு 2 மாதங்களுக்கு ஒருமுறை ஆயிரம் யூனிட்வரை இலவச மின்சாரம் அளிக்கப்படுகிறது.

கைத்தறி நெசவாளர்களுக்கு 2 மாதங்களுக்கு ஒருமுறை 300 யூனிட் மின்சாரம் இலவசமாக அளிக்கப்படுகிறது. என்றாலும், வீடுகளுக்கு வழங்கப்படும் மின்சாரக் கட்டணம் மற்ற மாநிலங்கள் போல் உயர்த்தப்படவில்லை.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் 100 யூனிட் மின்சாரம் இலவசமாகும். வீடுகளில் 100 யூனிட்டுக்கு மேல் பயன்படுத்தக்கூடிய மின்சாரத்திற்கு சராசரியாக கணக்கிடும்போது கட்டணம் ரூ.113ஆகும்.

இந்த சராசரி கட்டணத்தோடு ஒப்பிடும்போது மும்பை 100 யூனிட்டுக்கு ரூ.643 கட்டணம் வசூலிக்கப்படுகிறது. மும்பையில் ஒரு விசித்திரம் என்னவென்றால், அதானி ஒப்பந்தத்தின் மூலம் அளிக்கப்படும் மின்சாரக் கட்டணம் ரூ.643, டாடா நிருவாகத்தின் மூலம் அளிக்கப்படும் மின்சாரக் ரூ.524, மும்பை பிரிகான் எலக்ட்ரிசிடி மூலம் அளிக்கப்படும் மின்சாரக் கட்டணம் ரூ.488.

இராஜஸ்தான் மாநிலத்தில் அளிக்கப்படும் மின்சாரக் கட்டணம் ரூ.833

மராட்டிய மாநிலத்தில் அளிக்கப்படும் மின்சாரக் கட்டணம் ரூ.668

உத்திர பிரதேசத்தில் அளிக்கப்படும் மின்சாரக் கட்டணம் ரூ.693

பீகாரில் மாநிலத்தில் அளிக்கப்படும் மின்சாரக் கட்டணம் ரூ.684

மேற்கு வங்க மாநிலத்தில் அளிக்கப்படும் மின்சாரக் கட்டணம் ரூ.654

கர்நாடக மாநிலத்தில் அளிக்கப்படும் மின்சாரக் கட்டணம் ரூ.631

மத்திய பிரதேசத்தில் அளிக்கப்படும் மின்சாரக் கட்டணம் ரூ.643

ஒரிசா மாநிலத்தில் அளிக்கப்படும் மின்சாரக் கட்டணம் ரூ.426

சத்தீஸ்கர் மாநிலத்தில் அளிக்கப்படும் மின்சாரக் கட்டணம் ரூ.431

இப்படி, இந்திய மாநிலங்கள் ஒவ்வொன்றும் வீடுகளுக்கு வழங்கப்படும் மின்கட்டணத்தை உயர்த்தி வழங்கும்போது தமிழ்நாட்டில்தான் மிகமிகமிகக் குறைவாக ரூ.113 வசூலிக்கப்படுகிறது.

இதனை திராவிட முன்னேற்ற கழகமோ, தமிழ்நாடு அரசோ, குறிப்பிட்டு சொல்லவில்லை. இந்திய மாநிலங்களில் நிலவும் மின்சார கட்டணங்களை ஒப்பிட்டு ஆய்வு செய்து அரவிந்த்வாரியர் குறிப்பிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதன் மூலம் முதலமைச்சர் திராவிட நாயகர் அவர்கள் ஏழை, எளியோரின் நல வாழ்வில்செலுத்தி வரும் அக்கறையும் கரிசனமும் வெள்ளிடை மலையாக விளங்குகிறது.

கடலூர் மாவட்டத்தில் புயல் காரணமாக பலத்த மழை பெய்து இருந்த நிலையில், கடந்த 3 நாட்களுக்கு முன்பு மீண்டும் கனமழை பெய்தது. இதன் காரணமாக கடலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அழகியநத்தம், தூக்கணாம்பாக்கம், இராண்டாயிர வளாகம் உள்ளிட்ட பல்வேறு 15 க்கும் மேற்பட்ட கிராமங்களில் பாதிப்பு ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆலோசனைப்படி, கோ.ஐயப்பன் எம்.எல்.ஏ. அழகிய நத்தம் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களுக்கு நேரில் சென்று பார்வையிட்டு பொது மக்களுக்கு ஆறுதல் கூறினார். மேலும் அதே பகுதியில் பாதிக்கப்பட்ட நிலங்கள் மற்றும் வீடுகளை நேரில் பார்வையிட்டார். பின்னர் 1000த்திற்கும் மேற்பட்ட குடும்பத்திற்கு அரிசி, சேலை உள்ளிட்ட பல்வேறு நிவாரணப் பொருட்கள் வழங்கினார். அப்போது டாக்டர் பிரவீன் ஐயப்பன், கோவிந்தராஜ், வள்ளி கோவிந்தராஜ், ஊராட்சி மன்ற தலைவர் முத்துக்குமாரசாமி, துணைத் தலைவர் நடராஜன், முன்னாள் துணைத் தலைவர் சின்ன பொன்னு சீனிவாசன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் கே.விஆர்.ராதா கிருஷ்ணன், வார்டு உறுப்பினர்கள் சபரி, வசந்த, சிவகுமார் நிர்வாகிகள் பாபு, அசோக்குமார், வெங்கடேசன், ஹரி கிருஷ்ணன், ராஜாராம் உத்தரகுமார்,பிரபு மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

சாதி மத பேதத்தைச் சாடுங்கள்

எதிர்ப்புக்கு அஞ்சாதீர்.
ஏளனத்தைக் கேட்டு ஏமாறாதீர்.
மதத்தின் முன் மண்டியிடாதீர்.
கடவுளைக் கண்டு கருத்தழியாதீர்.
அறிவே துணை
மானமே மனிதனை மனிதனாக்குகிறது
என்பதை உணருங்கள்.
உலுத்தர் பேச்சை
உதறித் தள்ளுங்கள்.
சமத்துவம் நாடுங்கள்.
சகோதரத்துவம் கோருங்கள்.
சாதி மத பேதத்தைச் சாடுங்கள்.
தோல்வி கண்டு சலிப்புறாதீர்.
மாற்றார் மமதை கண்டு மனம் மருளாதீர்.
சிந்தித்து முடிவுக்கு வாருங்கள்.
அதன் வழி செயலாற்றுங்கள் செம்மல்களே!

- பேரறிஞர் அண்ணா

முன்னாள் ஒன்றிய அமைச்சர்

எஸ்.எஸ்.பழனிமாணிக்கம் தாயார் எஸ்.மரகதம் அம்மையார் மறைவு!

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, டிச.17-

முன்னாள் ஒன்றிய இணை அமைச்சர் எஸ்.எஸ்.பழனி மாணிக்கம் தாயார் எஸ்.மரகதம் அம்மையார் மறைவிற்கு கழகத் தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னாள் ஒன்றிய இணை அமைச்சர் எஸ்.எஸ்.பழனி மாணிக்கம் தாயார் எஸ்.மரகதம் அம்மையார் மறைவுச் செய்தி அறிந்து தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்ததுடன், தாயை இழந்து வாடும் எஸ்.எஸ்.பழனி மாணிக்கம் அவர்களை தொலைபேசியில் தொடர்புகொண்டு ஆறுதல் கூறினார்.

கடலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அழகியநத்தம் கிராமத்தில்

1000 பேருக்கு அரிசி, சேலை உள்ளிட்ட நிவாரணப் பொருட்கள்!

சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன் வழங்கினார்!

கடலூர், டிச.17-

கடலூர் மாவட்டத்தில் புயல் காரணமாக பலத்த மழை பெய்து இருந்த நிலையில், கடந்த 3 நாட்களுக்கு முன்பு மீண்டும் கனமழை பெய்தது. இதன் காரணமாக கடலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அழகியநத்தம், தூக்கணாம்பாக்கம், இராண்டாயிர வளாகம் உள்ளிட்ட 15 க்கும் மேற்பட்ட கிராமங்களில் பாதிப்பு ஏற்பட்டது.

இதனைத் தொடர்ந்து கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ. ஐயப்பன், அழகிய நத்தம் உள்ளிட்ட பல் வேறு கிராமங்களுக்கு நேரில் சென்று பார்வையிட்டு பொது மக்களுக்கு ஆறுதல் கூறினார். மேலும் அதே பகுதியில் பாதிக்கப்பட்ட நிலங்கள் மற்றும் வீடுகளை நேரில் பார்வையிட்டார். பின்னர் 1000த்திற்கும் மேற்பட்ட குடும்பத்திற்கு அரிசி, சேலை உள்ளிட்ட பல் வேறு நிவாரணப் பொருட்கள் வழங்கினார்.

அப்போது டாக்டர் பிரவீன் ஐயப்பன், கோவிந்த ராஜ், வள்ளி கோவிந்த ராஜ், ஊராட்சி மன்றத் தலைவர் முத்துக்குமாரசாமி, துணைத் தலைவர் நடராஜன், முன்னாள் துணைத் தலைவர் சின்ன பொன்னு சீனிவாசன், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் கே.விஆர். ராதா கிருஷ்ணன், வார்டு உறுப்பினர்கள் சபரி, வசந்த, சிவகுமார் நிர்வாகிகள் பாபு, அசோக்குமார், வெங்கடேசன், ஹரி கிருஷ்ணன் , ராஜாராம் உத்தர குமார், பிரபு மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

தென்காசி மாவட்டம், நடையநல்லூர் வட்டம் சொக்கம்பட்டி அருகில் உள்ள பெரியநாயகம் கோவிலுக்குச் செல்லும் பாலத்தினை 14.12.2024 அன்று வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் நேரடியாகப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். உடன் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் சங்கர், மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் உள்ளனர்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சிவகாசி மாநகர திமுக செயலாளர் எஸ்.ஏ.உதயசூரியன் பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கினார். உடன் சிவகாசி மாநகராட்சி மண்டல சேர்மன் குருசாமி, பகுதி கழக செயலாளர் மாரீஸ்வரன், மாமன்ற உறுப்பினர் காளிராசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.